# GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- WEEKLY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- TOPICWISE QUESTION
- MONTHLY QUESTION AND ANSWER

**28.10.2022**

**WEBSITE LINK** : https://gkrsinstitute.com/

**Telegram Link** : https://t.me/gkrsInstitute

**FACEBOOK LINK** : https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/

## மாநில செய்திகள்

### 1. 'நட்புடன் உங்களோடு-மனநல சேவை' திட்டம் தொடக்கம்

- தமிழகத்தில் அனைத்து மருத்துவ மையங்களிலும் மனநல ஆலோசனை பெரும் வகையிலான **'நட்புடன் உங்களோடு-மனநல சேவை'** திட்டம் தொடங்கப்பட்டது.
- தமிழகத்தில் ரூபாய் 2.6 கோடி மதிப்பில் 'நட்புடன் உங்களோடு-மனநல சேவை' என்ற புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- இதில் பல்வேறு பிரச்சனைகளால் **மன அழுத்தத்துக்கு** ஆளானவர் தங்களது பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம்.
- **இரண்டு மனநல மருத்துவர்கள்:**
  - நான்கு உளவியலாளர்கள் மற்றும் 20 ஆற்றுப்படுத்துனர் வாயிலாக மனநல ஆலோசனைகள் வழங்கப்படும்.
  - ஆரம்ப சுகாதார நிலையம் முதல் மருத்துவ கல்லூரி மருத்துவமனை வரை ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும்.

## மத்திய செய்திகள்

### 1. உலகின் பரபரப்பான விமான நிலையங்கள்

- உலகின் மிகப் பரபரப்பான விமான நிலையங்களின் பட்டியலில் **டெல்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம் பத்தாவது இடம்** பிடித்துள்ளது.
- விமானத்துறை ஆய்வு நிறுவனமான **ஒஏஜி**, உலகின் மிகவும் பரபரப்பான விமான நிலையங்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது.
- 2019 அக்டோபர் மற்றும் 2022 அக்டோபர் மாதங்களில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விமான சேவை நிலவரங்களை ஒப்பிட்டு இந்த பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.
- இந்த பட்டியலில் **முதலிடத்தில் அட்லாண்டா விமான நிலையம் உள்ளது. துபாய் விமான நிலையம் இரண்டாவது இடத்திலும், டோக்கியோ ஹனேடா விமான நிலையம் மூன்றாவது இடத்திலும்** உள்ளன.
- இந்த பட்டியலில் **2019** ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் டெல்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம் **14 வது இடத்தில்** இருந்தது.
- இந்நிலையில் நடப்பு ஆண்டு அக்டோபரில் பத்தாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.
- பரபரப்பான வழித்தடங்களின் பட்டியலில் **மும்பை-துபாய், டெல்லி-துபாய்** வழித்தடங்கள் இடம் பிடித்துள்ளன.

### 2. இந்தியா கேட் பிராண்டுக்கு அங்கீகாரம்

- நறுமணம், தனித்துவமிக்க சுவை உள்ளிட்ட சிறப்பம்சங்களுக்காக இந்தியா கேட் பிராண்ட் பாசுமதி அரிசிக்கு உலகின் நம்பர் ஒன் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

- **அமெரிக்கா, ஐரோப்பா, ஆசிய-பசிபிக், மத்திய கிழக்கு & அமெரிக்கா** கண்டங்களில் வெள்ளை மற்றும் பழுப்பு நிற பாசுமதி அரிசி வகைகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.
- இதில், இந்தியாவின் **கேஆர்பிஎல் நிறுவனத்தின்** இந்தியா கேட் உலகின் நம்பர் ஒன் பாசுமதி அரிசி பிராண்டாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

### 3. ஜி-20 உச்சி மாநாடு

- இந்தியாவில் அடுத்த ஆண்டு ஜி-20 உச்சி மாநாடு நடைபெற உள்ள நிலையில் அந்த கூட்டமைப்பின் பொது சமூக குழுவின் ( சி 20) தலைவராக **மாதா அமிர்தானந்தமயியை** மத்திய அரசு நியமித்துள்ளது.
- ஜி-20 கூட்டமைப்பின் அதிகாரப்பூர்வ தொடர்பு குழுக்களில் ஒன்றான சி20, அரசு சாரா மற்றும் வர்த்தகம் சாரா அமைப்புகளின் கருத்துக்களை உறுப்பு நாடுகளின் தலைவர்களிடம் எடுத்து செல்வதற்கான தளமாகும்.
- உலகில் வளர்ந்த மற்றும் வளர்ந்து வரும் நாடுகளை உள்ளடக்கிய ஜி-20 கூட்டமைப்பின் தலைமை பொறுப்பை வரும் டிசம்பர் ஒன்றாம் தேதி முதல் அடுத்த ஆண்டு நவம்பர் 30ம் தேதி வரை ஓராண்டுக்கு இந்தியா வகிக்க உள்ளது.
- சிகர நிகழ்வான ஜி-20 உச்சி மாநாடு, டெல்லியில் அடுத்த ஆண்டு **செப்டம்பர் 9-10 தேதிகளில்** நடைபெற உள்ளது.
- ஜி-20 கூட்டமைப்பானது, 19 நாடுகள் மற்றும் ஐரோப்பிய யூனியன் உள்ளடக்கியதாகும்.
- கடந்த 1999இல் இந்த கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது முதல் இந்தியா உறுப்பினராக உள்ளது.
- உலக அளவிலான ஒட்டுமொத்த உற்பத்தியில் ( ஜிடபிள்யுபி) **80 சதவீதத்தை** ஜி-20 நாடுகள் கொண்டுள்ளன.
- அத்துடன் உலக மக்கள் தொகையில் மூன்றில் இரு பங்கும், **77 சதவீதம்** வரையிலான சர்வதேச வர்த்தகத்தையும் என் நாடுகள் கொண்டிருக்கின்றன.
- ஜி-20 கூட்டமைப்பின் அதிகாரப்பூர்வ தொடர்பு குழுக்களில் ஒன்றாக சி20 கடந்த **2013-ல்** தொடங்கப்பட்டது.
- இதில் உறுப்பு நாடுகளின் பொது சமூக அமைப்புகள் உள்பட 800க்கும் மேற்பட்ட அமைப்புகள், பிரதிநிதிகள் இடம்பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### 4. ஐநா பயங்கரவாத தடுப்பு மாநாடு

- ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் பயங்கரவாத தடுப்பு மாநாடு மும்பையில் தொடங்குகிறது.
- ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர உறுப்பினர்களாக **அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, சீனா, பிரான்ஸ்** ஆகிய நாடுகள் உள்ளன.
- அந்த கவுன்சிலின் 10 நிரந்தரமற்ற உறுப்பு நாடுகளில் ஒன்றாக இந்தியா உள்ளது.
- இந்தியாவின் பதவிக்காலம் வரும் டிசம்பருடன் நிறைவடைகிறது. ஐ.நா.

பாதுகாப்பு கவுன்சிலின் பயங்கரவாத தடுப்பு குழுவின் தலைமை பொறுப்பையும் இந்தியாவில் வகித்து வருகிறது.

- அக்குழுவின் சிறப்பு மாநாடு முதல் முறையாக இந்தியாவில் நடைபெற உள்ளது. அந்த மாநாடு **மும்பையில்** தொடங்க உள்ளது.

## 5. ஜி.எம்.அக்பர் அலி தலைமையில் தெரிவிக்குழு அமைக்கப்பட்டது

- **தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005** படி தமிழகத்தில் தகவல் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.
- தகவல் ஆணையத்தின் தலைமை தகவல் ஆணையராக ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி **ஆர்.ராஜகோபால்** செயல்பட்டு வந்தார்.
- அவர் மற்றும் நான்கு தகவல் ஆணையர்களின் பதவிக்காலம் முடிவுக்கு வந்த நிலையில் புதிதாக தகவல் ஆணையர்களின் நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
- இதற்காக ஓய்வு பெற்ற நீதிபதி ஜி.எம்.அக்பர் அலி தலைமையில் தெரிவிக் குழு அமைக்கப்பட்டது. இந்த குழுவில் நகராட்சி நிர்வாக துறை கூடுதல் தலைமைச் செயலாளர் **சிவதாஸ் மீனா**, ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி **கே.அலாவுதீன்** ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.
- **பத்திரிக்கை சமூக-சேவகர்கள்:**
  - பொதுவாழ்வில் பரந்துபட்ட அறிவையும் , அனுபவத்தையும் கொண்டிருக்கக் கூடியவர்கள் தகவல் ஆணையர்கள் பதவிக்கு விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்குழு கேட்டுக் கொண்டுள்ளது.
  - சட்டம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் , சமூக சேவை , மேலாண்மை, இதழியல், வெகுஜன ஊடகம் , நிர்வாகம் ஆகிய பிரிவுகளில் சிறப்பான பங்களிப்பை செய்தவர்கள் தகவல் பெறும் உரிமை சட்டத்தின் படி தலைமை தகவல் ஆணையர் மற்றும் தகவல் ஆணையராக நியமனம் செய்யப்படுவது என தெரிவு குழு கூறியுள்ளது.
- **அரசியல்வாதிகளுக்கு இடமில்லை:**
  - **தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 15(6)**-ன் படி, நாடாளுமன்ற உறுப்பினரோ, சட்டப்பேரவை உறுப்பினரோ தகவல் ஆணையராக பொறுப்பு வகிக்க முடியாது.
  - ஊதியமாக வரக்கூடிய பணிகளில் இருப்போர், அரசியல் கட்சிகளில் இணைந்து செயல்படுவோர், வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் ஆகியோரும் விண்ணப்பம் செய்ய முடியாது.
  - தலைமை தகவல் ஆணையர் மற்றும் தகவல் ஆணையர்களுக்கான பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாகும். 60 வயதை கடந்தவர்களாக இருந்தால் 65 வயது வரையில் பதவியை வகிக்க முடியும்.

## 6. கிரிக்கெட்டில் வீரர்களுக்கு இணையாக வீராங்கனைகளுக்கும் ஊதியம்

- இந்திய கிரிக்கெட்டில் **பாலின சமத்துவத்தை ஊக்குவிக்கும் வகையில்**,

வீரர்களுக்கு இணையாக வீராங்கனைகளுக்கும் ஆட்ட ஊதியம் வழங்கப்படும் என்று பிசிசிஜ அறிவித்தது.

- வீராங்கனைகளுக்கு ஒரு ஆட்டத்திற்கான ஊதியம், டெஸ்ட் கிரிக்கெட்டில் ரூபாய் 4 லட்சத்திலிருந்து ரூபாய் 15 லட்சம் ஆகவும் ஒன் டே கிரிக்கெட்டில் ரூபாய் ஒரு லட்சத்திலிருந்து ரூபாய் 6 லட்சம் ஆகவும், டி 20 கிரிக்கெட்டில் ரூபாய் ஒரு லட்சத்திலிருந்து ரூபாய் மூன்று லட்சமாகவும் உயர்த்தப்படுகிறது.
- சர்வதேச கிரிக்கெட்டில் இரு பாலின கிரிகெட்டர்களுக்கும் சம ஊதியம் வழங்கும் நாடுகளின் வரிசையில் இரண்டாவதாக இணைகிறது.
- இந்தியா, அத்தகைய முதல் நாடாக **நியூசிலாந்து** இந்த ஆண்டில் ஏற்கனவே முந்தி கொண்டது.
- **ஆஸ்திரேலியாவும்** சம ஊதிய முறையை அமல்படுத்த பரிசீலித்து வருகிறது.